**IN THE COURT OF THE XXIII METROPOLITAN MAGISTRATE, SAIDAPET, CHENNAI-15**
**CC.No. 2751 of 2025**

**அ.சா 1 – அஜித்குமார்** **நாள் 01.04.2026**

| | | |
|---|---|---|
| பெயர் | : | அஜித்குமார் |
| வயது | : | 28 |
| தந்தை பெயர் | : | நவசக்தி |
| முகவரி | : | எண். 17, ஏரிக்கரை தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை |
| தொழில் | : | Cashier |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 on the 01st day of April 2026

**எதிரி பிடி வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u>**

1. ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரி மீது எந்தப் புகாரும் கொடுக்கவில்லை. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

2. கடந்த 06.04.2025ம் தேதி காலை கடையில் வேலை செய்துகொண்டிருந்தபோது இரவு 08.30 மணியளவில் நபர் என்னிடம் பொருட்களை வாங்கினார். நான் பொருட்களை கொடுத்துவிட்டு ரூ.38 கேட்டதற்கு எதிரி என்னிடம் நான் யார் என்று தெரியுமா என்கிட்டயே காசு கேட்குறியா என்று சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து என்னிடம் காண்பித்து இதாலேயே வெட்டி சீவித்தள்ளிவிடுவேன் என்று கூறிவிட்டு கடையில் இருந்த பொருட்களை கீழே தள்ளி சேதப்படுத்தி

கள்ளாவில் இருந்த ரூ500/-யை மிரட்டி வாங்கிவிட்டு இதைவெளியே சொன்னால் உயிரோடு விடமாட்டேன் என்று என்னை மிரட்டியதாக புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக் கொண்ட பின் என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

K R PADMA KUMARI

Digitally signed by K R PADMA KUMARI
Date: 2026.04.01 18:12:35 +0530

**23 வது பெருநகர குற்றவியல் நடுவர்.**

**சைதாப்பேட்டை, சென்னை-15**